# முதல்வர் பிறந்த நாளில் எடுக்க வேண்டிய உறுதிமொழி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் செய்தி!

உயிர்ப் பிரச்சினையான மொழிப்போரையும் உரிமைப் பிரச்சினையான தொகுதி மறுசீரமைப்பையும் தமிழ்நாடு எதிர்கொண்டுள்ள சூழலில் தமிழ்நாட்டு மக்கள் ஏற்க வேண்டிய உறுதிமொழி:

**உறுதிமொழி**

- **தமிழ்நாட்டின் நலன்களையும் எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம்!**
- **தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம்!**
- **தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்! இதுதான் ஒரே இலக்கு!**

# கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை

8-ஆம் பக்கத் தொடர்ச்சி

**தொகுதி வரையறை பா.ஜ.க. பதறுவது ஏன்?**

அதேபோல தொகுதி வரையறை பற்றி முதலமைச்சர் பேசினால், பி.ஜே.பி. பதறுகிறார்கள். இன்னும் நடக்கவே இல்லை அதைப் பற்றி பேசுகிறீர்களே என்று கேட்கிறார்கள். நடந்துவிட்டால் அதுபற்றி பேச முடியுமா? இவ்வளவு நாள் பேசாமல் ஏன் இருந்தீர்கள் என்று அப்போது கேட்பார்கள்.

ஆனால் தொகுதி மறுசீரமைப்பு நடைபெறும் என்பதை சமீபத்தில் பேசிய அமித் ஷா கூட மறுக்கவில்லை. அதற்கு முன்பே நாடாளுமன்றத்தில் தொகுதி சீரமைப்பு பற்றிய கேள்விக்கு, நடைபெறும் என்று தெளிவாக பதில் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா கொண்டு வரப்பட்ட போது, தொகுதி சீரமைப்புக்குப் பிறகு தான் இது நடைமுறைக்கு வரும் என்றும் தெளிவாக சொல்லப்பட்டி ருக்கிறது. எனவே தொகுதி சீரமைப்பு நடைபெறப் போகிறது. அது மக்கள் தொகை அடிப்படையில் நடைபெற்றால் நாங்கள் மிகப்பெரிய இழப்புக்கு ஆளாவோம் என்றுதான் அப்போதில் இருந்தே சொல்லி வருகிறோம்.

இப்போது 39 எம்.பி.க்கள் இருக்கி றோம், அது 31 ஆகும். அதன் பின் இன்னும் குறையும். நமக்கு மட்டுமல்ல கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கும் இதே நிலைதான். ஆனால் தேர்தல் பிரச்சாரத்துக்கு கூட நம் மாநிலத்துக்கெல்லாம் வர மாட்டார்கள். நாம் சொல்லும் எதுவும் அவர்கள் காதில் ஏறாது,

தமிழ்நாட்டில் 39, புதுச்சேரி 1 என 40 எம்.பிக்கள் என இவர்களின் ஆதரவு இருந்தால்தான் நாம் ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலை இருந்தால் மட்டுமே, நாம் சொல்வதற்கு மரியாதை இருக்கும். அது இல்லவே இல்லை என்றால், நம் உரிமைகளை எப்படி கேட்க முடியும்? இவ்வளவு இருந்தே நம்மை மிரட்டிப் பார்க்கி றார்கள் என்றால், தொகுதிகள் குறைந்தால் நமது நிலை என்ன?

**கல்வி மீது கவனம் செலுத்திய கலைஞர்!**

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்து வதில் தமிழ்நாடு சிறப்பாக செயல் பட்டது. தலைவர் கலைஞர் காலத்தில் கல்வி மீது அதிக கவனம் செலுத்தினார். சுகாதாரத்தில் அதிக கவனம் செலுத்தி னார். தமிழ்நாட்டின் ஹெல்த் இண்டி கேட்டர்ஸ் வளர்ந்த நாடுகளை விட அதிகமாக இருக்கிறது. அதனால்தான் மக்கள் தொகை கட்டுப்பாடாக உள்ளது. இது அரசாங்கம் மிகச் சிறப்பாக செயல்பட்டதால் உருவான ஒன்று.

ஆனால் நல்லா படித்தபையனை கிளாஸ் ரூமை விட்டு வெளியே நில் என்று சொல்வது மாதிரி. நாமே பாதிப்பது மாதிரி தொகுதி சீரமைப்பில் ஏதும் நடந்துவிடக் கூடாது என்றுதான் நாம் போராடுகிறோம்.

**அமித்ஷா தெளிவுபடுத்தவில்லை!**

ஆனால் அமித் ஷா என்ன சொன்னார்? உங்களுக்கு தொகுதிகள் குறையாது என்று சொன்னார். உபி, ராஜஸ்தான், பீகாருக்கு அதிகப்படுத்த மாட்டோம் என்று சொல்லவில்லை. தெளிவுபடுத்த வில்லை.

இதைத்தான் திராவிட நாயகன், தமிழ்நாடு முதலமைச்சர், தலைவர் கலைஞரின் மகன் அண்ணன் தளபதி கேள்வி கேட்கிறார். அவரது கேள்விக்கு நேர்மையாக பதில் சொல்லாமல் திசை திருப்புகிறார்கள்.

இந்த கேள்விகளுக்குப் பின்னால் இருக்கும் நேர்மையை நியாயத்தைப் புரிந்துகொள்ளுங்கள். இதைத்தான் தமது பிறந்தநாள் செய்தியாக முதலமைச்சர் விடுத்திருக்கிறார்.

முதலமைச்சர் தலைவர் அண்ணன் அவர்களின் பிறந்தநாள் உறுதி மொழியை நாம் எடுத்துக் கொள்வோம். ‘தமிழ்நாட்டின் நலன்களையும் எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத் தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபடுவோம், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும். இதுதான் ஒரே இலக்கு’ இதுதான் நமது உறுதிமொழி இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பி னர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சென்னை தென் மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜய குமார், மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மாநில மகளிர் அணி நிர்வாகி கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## கழகத் தலைவர் – முதல்வர் பிறந்தநாள்!

# ஆளுநர் ஆர்.என்.ரவி வாழ்த்து!



### “மகிழ்வோடு தமிழ்நாட்டு மக்களுக்குச் சேவையாற்றிட வாழ்த்துகிறேன்!” எனப் பதிவு!

**சென்னை, மார்ச்.2 -**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்து தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்.**

**அதில், “பூரண உடல் ஆரோக்கியத்து டனும் - மகிழ்வுடனும் தமிழ்நாட்டு மக் களுக்குச் சேவையாற்றிட தங்களை (முதல்வரை) வாழ்த்துகிறேன்!” என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

ஆளுநர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

அன்புள்ள முதலமைச்சர் அவர்களுக்கு,

தாங்கள் இன்று தங்களுடைய 72வது பிறந்த நாளை கொண்டா டுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தங்களுடைய தலைமையின் கீழ் தமிழ்நாட்டு மக்கள் எல்லா நலன்களையும் பெற்று மகிழ்ச்சி யுடன் வாழ வாழ்த்துகிறேன்.

மேலும் எல்லாம் வல்ல இறைவன் அருளால் தாங்கள் பூரண உடல் ஆரோக்கியத்துடனும், சந்தோஷத்துட னும், தமிழ்நாட்டு மக்களுக்கு சேவை ஆற்றிடவும் இந்நன்நாளில் தங்களை வாழ்த்துகிறேன்.

இவ்வாறு தமது வாழ்த்துச் செய்தியில், ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் குறிப் பிட்டுள்ளார்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், தியாகதுருகம் பிரதான சாலை, கள்ளக்குறிச்சி. |
| | மாலை 4.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக அலுவலகம், ராஜா நகர், கள்ளக்குறிச்சி. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 26-02-2025










